வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 0015/ஆ4/2022, நாள். 02.02.2022.

பொருள் 2021–2022 –ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வுக் கட்டணம் மற்றும் **TML கட்டணம்** செலுத்துவதற்கும் **கூடுதலாக கால அவகாசம்** வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 019373 / எப்.1 / 2022, நாள். 19.01.2022 மற்றும் 02.02.2022.
2. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 027018/எச்1/2021, நாள். 04.01.2022 மற்றும் 19.01.2022.
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள். 19.01.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களின்படி, 2021–2022 –ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை03.02.2022 முதல் 05.02.2022 வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, **தேர்வுக் கட்டணம்** மற்றும் **TML கட்டணத்தினையும்** இணையதளம் வாயிலாக செலுத்தவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் ஒரு சில பள்ளிகளின் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன எனத் தெரியவருவதால், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கும், இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துவதற்கும் 03.02.2022 முதல் 05.02.2022 வரையிலான நாட்களில் **கூடுதலாக கால அவகாசம்** வழங்கப்படுகிறது. இதுவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் கடைசி வாய்ப்பாகும். இதன் பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.

எனவே, வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் தங்களது ஆளுகைக்குட்பட்டட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அனைவரையும், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை 05.02.2022–க்குள் நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு– பார்வை 1–இல் காணும் கடிதம்

பெறுா்
மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர்.
(தகவலுக்காகவும், தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)

நகல் அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

Scanned with Oken Scanner